**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**EP No.6/2025**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஸ்வநாதன் | தொழில் | பனியன் கம்பெனி |
| த/பெ | ராமசாமி | கிராமம் | திருப்பூர் டவுன் |
| வயது | | தாலுகா | திருப்பூர் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

21.09.1984 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல் ம.சா.ஆ.2, வில்லங்க சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.3. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனு சொத்துக்கள் எதிர்மனுதாரரின் தந்தை பழனிசாமி என்பவருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மனு சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு பாத்தியம் உள்ளதை என்பதை காட்ட நான் எந்த விதமான ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு எந்த விதமான பாத்தியமும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு பாத்தியம் இல்லாத சொத்துக்களில் ஏலம் கோருவது சட்டப்படி ஏற்றத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.04.17 18:43:16 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.